இயக்குநர் முனைவர் ரவி அவர்கள் இத்திட்ட ஒருங்கிணைப்பாளராக இருந்து சிறப்பாகச் செயல்படுகின்றனர்.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்:** குமாரபாளையம் அரசு கலை மற்றும் அறியவில் கல்லூரியுடன் புரந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. ஆசிரியர்கள் பரிமாற்றம், கற்பித்தல் கருவிகள் ,நூலகம், விளையாட்டு உள்கட்டமைப்புகள் பரிமாற்றம் ஆகியன இந்த ஒப்பந்ததின் அடிப்படையில் செய்லபடுத்தப் படுகின்றன. கலைக்கல்லூரி முதல்வர் ரேணுகா அவர்களுக்கும் நோடல் அலுவலர் முனைவர் ரகுபதி அவர்களுக்கும் இக்கல்லூரியின் நோடல் அலுவலர் முனைவர் வைரமணி அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**உடற்கல்வி:** கல்லூரியின் ரூசா திட்ட நிதியில் ரூ.17 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட கூடைப் பந்தாட்ட மைதானம் இவ்வாண்டு பயன்பாட்டுக்கு முதல்வர் அவர்களால் திறக்கப்பட்டது. ஒவ்வொரு புதன்கிழமையும் மாணவர்களுக்கு யோகா வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இவ்வாண்டு மதிலகப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன. 50 க்கும் மேற்பட்ட பிரிவுகளில் உள் அரங்கப்போட்டிகள், தடகளப்போட்டிகள், அணி விளையாட்டுப் போட்டிகள் மாணவ மாணவிகளுக்கு நடத்தப்பட்டன. 29.05.22 அன்று கல்லூரி விளையாட்டு விழா சிறப்பான முறையில் நடைபெற்றது மாணவர்களின் அணி வகுப்பு மரியாரதையை ஏற்று காவல் ஆய்வாளர் நந்தகுமார் போட்டிகளைத் தொடங்கி வைத்தார். பிற்பகல் நிகழ்வில் தஞ்சாவூர் காவல் துணைக் காணிப்பாளர் திரு சுபாஸ் சந்திரபோஸ் பங்கேற்று உரையாற்றிப் பரிசுகள் வழங்கினார். உடற்கல்வி இயக்குநர் முனைவர் ரவி அவர்களுக்கு அன்பான பாராடுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சுற்றுச்சூழல் சங்கம்:** கல்லூரி பல்லுயிர் பெருக்க மண்டலமாக விளங்குவதால் சுற்றுச்சூழல் சுறப்பாகப் பேணப்படுகிறது. மூலிகைச்செடிகள் பயிரிடுதல், பனைவிதைகள் நடுதல், விதைப்பந்துகள் தயாரித்து வினியோகம் செய்தல், புகையில்லாத விபத்தில்லா சுற்றுச்சூழல் தீபாவளி கொண்டடுதல், சுற்றுச் சூழல் விழிப்புணர்வு போட்டிகள், சித்த மருத்துவ்விழிப்புணர்ச்சி நிகழ்ச்சி ஆகியன இச்சங்கத்தின் முக்கியமான பணிகளாகும். முனைவர் வைரமணி அவர்கள் இம்மன்றத்தினைச் சிறப்பாக வழிநடத்துகிறார்கள்.

**வேலைவாய்ப்பு வழிகாட்டு மையம்:** இவ் அமைப்பின் சார்பில் இரண்டு பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியர்களைத் தேர்வு செய்ய வளாக நேர்காணல் கல்லூரியில் நடைபெற்றது 18 பேர் வேலைக்காகத் தேர்வு செய்யப்பட்டனர் வேலைவாய்ப்புச் செய்திகளை வாட்சப் குழுக்கள் வழியாகப் பரிமாற்றம் செய்யப்படுகிறது இவ்வமைப்பின் ஒருங்கிணைப்பாளராக பேரா யுவராஜ் செயல்படுகிறார்.

